**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 61-2024**

Examined as : PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : நித்ய செல்வகுமாரி | Defence | : |
| Father/Husband Name | : ஜெயசீலன் | Court | : |
| Village | : அன்னவாசல் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 36/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 09.09.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து அங்கன்வாடி ஊழியராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2020ம் ஆண்டு அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்தேன். தற்போது பொறையாரில் வசித்து வருகிறேன். நான் ஞானசேகரன் வீட்டிற்கு எதிர் வீட்டில் நான் வசித்து வந்தேன். கடந்த 2020 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஞானசேகரன் வீட்டின் முன்பு சண்டை நடந்தது. காமராஜ் அவரது மனைவி மற்றும் அவரது மகன் ஆகியோர் தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அந்த ஊரில் உள்ள காமராஜின் உறவினர்கள் ஞானசேகர் வீட்டு வேலியை வெட்டி எரிந்தார்கள். ஞானசேகரனுக்கு 3 மகள்கள் உள்ளார்கள். காமராஜின் மனைவி ஞானசேகரனின் மகள்களை அசிங்கமாக திட்டினார்கள். நான் அவர்களிடம் நியாயம் கேட்டேன். அவர்கள் என்னையும் திட்டினார்கள். எனது கணவர் காமராஜ் குடும்பத்தாறிடம் தகராறை தட்டி கேட்டதற்கு பிரபாகரன் எனது கணவரை துரத்திகொண்டு ஓடினார்.இது சம்பந்தமாக எனது கணவர் பெரம்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் பிறகு நாங்கள் அந்த பிரச்சனையில் ஈடுபடவில்லை.

**எதிரி தரப்பு வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**